14.10.2025

அ.வ.எண். 105/2020

வா.சா.1 - பாலசுப்பிரமணியம், த/பெ. ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 14.10.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பிரதிவாதிகளுக்கு எவ்வளவு இடம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அரசு சர்வேயர் வந்து சொத்தை அளவீடு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 கிரய ஆவணத்தில் வண்டிப்பாதை அளவு குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் வண்டித்தடம் உள்ளது, அளவு சொல்லவில்லை. வா.சா.ஆ.10 ஆவணம் 11.07.2013 அன்றே நகல் எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் எதற்காக நகல் வேண்டி விண்ணப்பம் செய்தேன் என்றால் 2013 ல் வண்டிப்பாதையில் மண்ணை கொட்டிதடத்தை அழித்தனர். புல எண்.379/3 ல் வருவாய்துறையில் எனது பெயரை சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதற்காக தான் நீதிமன்றம் வந்தேன். 7 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வருடத்தை நான் கவனிக்கவில்லை. வா.சா.ஆ.10 பிரதிவாதி தேவகி கிரயம் பெற்ற பத்திரத்தில் வாதிகளுக்கான தடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வா.சா.ஆ.5 பாகசாசனத்திற்கு பின்னிட்டு பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றும், அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அது வேறு காலைக்கு உரியது.

3. ஆதியில் இட்டேரியில் இருந்தது என்பதை காட்டுவதற்கான வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா சுப்பண்ணகவுண்டர் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம், கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல்

செய்துள்ளேன். நான் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 புகார் மனு ஏற்பு ரசீதில் தடத்திற்கான அளவுகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களை சரிபார்த்து பார்த்து தான் வா.சா.ஆ.5 பாகசாசன பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் வருவாய் ஆவணங்களை பார்க்கவில்லை, என் தகப்பனார் பெயரில் உள்ள ஆவணத்தை என் பெயரில் மாற்றிகொண்டேன். நான் வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் பார்த்துவிட்டு க.ச.எண்.379/3 ல் உள்ள பூமிகள் அனைத்து பிரதிவாதிகள் பெயரில் உள்ளதால் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.5 பாகசாசன பத்திரம் ஏற்படுத்தப்பட்ட பின்னிட்டு 2020 ம் ஆண்டு வரை பட்டாவில் எனது பெயரை மாற்றம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்தில் உள்ள வண்டிப்பாதையின் உட்பிரிவு என்ன என்றால் க.ச.எண்.379/3 என்பது, க.ச.எண்.379/3A என உட்பிரிவு செய்யப்பட்டது. க.ச.எண்.379/3A ன் மொத்த அளவு என்ன என்றால் அகலம் 4 மீ உள்ளது. வா.சா.ஆ.5 பாகசாசன பத்திரத்தில் க.ச.எண்.379/3A என்ன ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. பிரதிவாதி கிரயம் பெற்ற பூமியில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் வழி போக விவசாயம் செய்து வருகிறார், தற்போது வழி பிரச்சனையில் உள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களில் க.ச.எண்.379/3A குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மாமூல் தடப்பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் 4 மீட்டரின் செண்ட் அளவு என்ன என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் அவ்வாறு ஒரு தடம் இருந்து நான் பயன்படுத்தி இருந்தால் அதற்கான அளவுகளை சரியாக சொல்லியிருப்பேன் என்றும், தடம் இல்லாத காரணத்தால் தான் அளவுகளை சொல்லவில்லை என்றால் மாமூலாக போய் கொண்டிருக்கும் தடத்தை அளக்கவில்லை.

6. தடத்தை கழித்து விட்டால் பிரதிவாதிகளுக்கு எவ்வளவு பூமி வரும் என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. மாற்றுத்தடம் உள்ளது என வழக்குரை மற்றும்

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை அது எங்களுடைய தடம் அல்ல. வழக்குரையில் முதலில் சொல்லிய 25 அடி தடத்திற்கும், பின்னிட்டு சொன்ன 12 அடி தடத்திற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் FMB இருந்த அளவுபடி இரண்டாவதாக திருத்தியுள்ளேன். 12 அடி திருத்தம் செய்யப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 4 ல், பிரதிவாதியும் அவருடைய முன் உரிமையாளர்களும் தாவா வண்டிப்பாதையை நாங்களும் எங்கள் முன் உரிமையாளர்களும் அனுபவித்து வருவதற்கு எவ்வித தடையும் ஏற்படுத்தவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றும், பிரதிவாதிகளின் முன் உரிமையாளர்கள் யார் என்றால் 1. மாறன், அவருக்கு முன்பாக 2. மருதாச்சல கவுண்டர், அவருக்கு முன்பாக இருந்தவர்களும் யாரும் எங்களை தடுக்கவில்லை.

7. மாறனுக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு பூமி உள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 4 ல், தாவா பிரதிவாதி 2020 ம் ஆண்டில் எங்களுக்கு பாத்தியப்பட்ட வழக்குரையில் ஏ-பட்டியலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை அவர் கேட்கும் குறைந்த விலைக்கு விற்பனை செய்யுமாறு கேட்டார் என சொல்லியுள்ளேன் என்றும், யாரிடம் என்ன விலைக்கு, எந்த தேதியில் கேட்டார் என, பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் தேதி நினைவில்லை, மற்ற விவரங்களும் நினைவில்லை. உண்மையில் என்னிடம் அவ்வாறு கேட்கவில்லை என்றும, அவ்வாறு கேட்டிருந்தால் என்ன விலை என்ற விவரங்களை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பள்ளமானது 3 கி.மீ. தாண்டி கௌசிகா நதியை சென்றடைகிறது என்றால் பஞ்சாயத்து ரோட்டை தாண்டி பள்ளம் செல்கிறது. என்னிடம் காட்டப்படும் தடத்தின் அகலம் 30 அடி இருக்கும் என்றால் தெரியாது, அது என்னுடைய தடம் அல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு என்னுடையது என்றால் சரிதான். மேற்படி வீட்டை நான் 4 மாதங்களுக்கு முன்பு கட்டினேன். மேற்படி வீட்டிற்கு மின்சார இணைப்பு உள்ளதா என்றால் வாங்கியுள்ளேன். பஞ்சாயத்திடம் அனுமதி பெற்று மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டின் PLAN -யை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்ய முடியுமா என்றால் பிளான் எதுவும் ஆகவில்லை. நான் தற்காலிகமாக குடிசை போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தற்காலிகமாக போட்ட குடிசைக்கு பஞ்சாயத்தில் ஒப்புதல் தரமாட்டார்கள் என்றால் சரியல்ல. வழக்குரையில் சி அட்டவணையில் மண் ஏறி உள்ளது என்றுசொல்லியுள்ளேன் என்றும், அதன் அளவுகளை பற்றி சொல்லவில்லை என்றால் மண் ஏறவில்லை, அது வண்டிப்பாதை ஆகும். அப்போது எனது பிராதில் மண் ஏறியுள்ளது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் அவ்வாறு இல்லை, சரியல்ல.

9. வழக்கு சொத்து விவரத்தை, நான் வா.சா.ஆ.5 பாகசாசன பத்திரத்தை வைத்து தான் தயார் செய்தேன் என்றால் என் அப்பா வாங்கிய ஆவணத்தை அடிப்படையாக கொண்டு சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில், க.ச.எண்.379/3 ல் உள்ள வண்டிப்பாதை எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை, மாமூல் வண்டிப்பாதை என்று சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் பெயரில் க.ச.எண்.379/3 காலை முழுவதும் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. க.ச.எண்.379/3 ல் வருவாய் அலுவலர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் வண்டிப்பாதையை ஒட்டியுள்ள வீடு ராமலிங்கத்தையுடையது என்றால் சரிதான். ராமலிங்கத்தின் வீட்டை தாண்டி தான் எனது வீடு உள்ளது என்றால் எனது வீடு மேல்புறமாகவும், ராமலிங்கம் வீடு கிழபுறமாகவும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நிலமானது ராமலிங்கம் வீட்டை தாண்டி உள்ள நிலம் என்றும், அதை ராமலிங்கம் 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பாதையை சுமார் 8 ஏக்கர் நிலத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தடமானது என்னுடைய வீட்டை அடைவது போல் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11. நீதிமன்றம் மூலமாக ஆணையரை நியமனம் செய்து தடத்தை பார்வையிட எனக்கு சம்மதமா என்றால் தடம் எங்களுடையது அல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதி இடத்தில் வண்டித்தடம் ஒருபோதும் இல்லை என்றும், அதேபோல் 60 ஆண்டுகளாக வண்டித்தடத்தை பயன்படுத்தி வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காததாலும் மற்றும் உரிய நேரத்தில் வழக்கு தாக்கல் செய்யாததாலும் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மாற்றுத்தடம் இருந்தும் அதை மறைத்துவிட்டு பிரதிவாதி மீது பொய் வழக்கு தாக்ல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. க.ச.எண்.379/3 காலை முழுவதும் பிரதிவாதிக்கு கட்டுப்பட்டது என்றால் சரியல்ல.

12. எனது வழக்குரையில் வா.சா.ஆ.5 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு தான் வண்டித்தடம் கேட்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரைக்கு நான் மறு பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பாகசாசனம் செய்து கொண்டதில் நான்கு எல்லை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur